(முற்பகல் 10-10)

2. தகவல் கோரல்

(அ) மாநில அரசு ஊழியர்களுக்குக் கிராக்கிப்படியை உயர்த்துவது

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நம்முடைய பொது விவாதத்தை இறுதிப்படுத்திவைத்து நமது நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற காலத்தில், மாநில அரசு ஊழியர்களுக்கு 4 கிராக்கிப்படி கொடுக்கவேண்டிய விஷயத்தைப் பற்றி மத்திய அரசு முடிவு எடுத்தவுடனே நாங்கள் முடிவு எடுத்து அறிவிப்போம் என்று குறிப்பிட்டார்கள். மத்திய அரசு முடிவெடுத்தாகிவிட்டது. முடிவு வெளி வந்துவிட்டது; நம்முடைய அரசு அதுபற்றி என்ன........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாநில அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கு நன்றி. (குறுக்கீடு) நிதி அமைச்சர் இங்கில்லை. நிதி அமைச்சர் டெல்லியிலே இருந்து வந்தவுடனே நாளை, அல்லது நாளைய மறுதினம் சொல்வார். பொறுத்துக் கொள்ளுங்கள்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. பா்பு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆட் ஆர்டர். நம்முடைய திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு.கி. வீரமணி அவர்கள் இஸ்மாயில் கமிஷன் அறிக்கைமீது நடவடிக்கை எடுக்கவில்லையென்று இன்று மாபெரும் ஊர்வலத்தை நடத்திக்கொண்டு கோட்டையை நோக்கி, வருகிறார்கள். அதுகுறித்து ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுதுதான் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தீர்கள். அதைப் பார்த்தேன். எடுத்துக்கொள்வதா இல்லையா என்று இன்னும் தீர்மானிக்கப் படவில்லை.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரத்தில் கடந்த 8 வாரங்களாக 20,000-க்கும் அதிகமான பீடித் தொழிலாளிகள் போராட்டம் நடத்தி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பீடித் தொழிலாளிகளைப் பற்றி நேற்றையதினம் நடந்த தொழிலாளர் நல மானியக் கோரிக்கையில் பேசி இருக்கவேண்டும். பேசி அமைச்சரிடம் வாக்குறுதி வாங்கியிருக்கலாம். பேசத் தவறியது உறுப்பினரது குறையே தவிர, என்னுடைய குறை அல்ல. (குறுக்கீடு) நேற்று தான் தொழிலாளர் நல இலாகா மானிய விவாதம் முடிந்திருக